மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூரில் நிலம் வாங்கி விற்பனைக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டிற்குள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி விவசாயிகளைக் கொண்டிருக்கும் தொண்டாமுத்தூர் பகுதியில் கடந்த 5 ஆண்டுகாலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும், அது செய்து முடிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டதா? எப்போது கட்டுமானப் பணிகள் துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்ட இடங்களில் ஒருசில பிரச்னைகள் வந்தன. அதனால் வேறு இடம் பார்ப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் நிலத்தைக் கையகப்படுத்தி, பின்னர் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை மதிப்பீடு செய்கிறபோது அங்கே இருக்கிற மார்க்கெட் விலையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வருவாய்த்துறை மதிப்பீடுகளைச் செய்வதால், விவசாயிகள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள் அல்லது வழக்காடு மன்றத்திற்கு போகிறார்கள். இதைப் பொறுத்தவரையில் வருவாய்த் துறைக்கு தகுந்த உத்தரவுகளைப் போட்டு, ஓரளவு நியாயமான விலையை, மார்க்கெட் விலையை அனுசரித்து, விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுமா? இப்படி நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் கட்டுமானப் பணிகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றன. ஏற்கனவே அந்தக் கட்டுமானப் பணிகள் இரண்டு மடங்கு ஏறியிருக்கிறது. இதைத் தடுக்கும் முறையில் நிலத்தின் விலையை நிர்ணயிக்கும் போது, மார்க்கெட் விலையையும் கருத்தில் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய ஆலோசனையை துறைக்குத் தெரிவிக்கப்படும்.

பேச்சிப்பாறையிலுள்ள அன்னாசிப்பழப் பண்ணை.

*323—(*வினா 21679)*—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலுள்ள அன்னாசிப் பழப் பண்ணையிலிருந்து அரசுக்கு லாபம் கிடைக்கிறதா ?

1984 மார்ச் 15]

(ஆ) இந்தப் பண்ணையை விஸ்தரிப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

[முற்பகல் 9-40]

திரு. டி. மணி : தலைவரவர்களே, பேச்சிப்பாறையில் உற்பத்தியாகிற அன்னாசிப்பழம் நல்லமுறையில் பலன் அளிப்பதாக இருக்கிறது. அங்கு உற்பத்தியாகிற பழங்கள் எந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக யார், யாருக்கு விற்பனைச் செய்யப்படுகின்றன ? ஏற்கெனவே இந்த உற்பத்திக்கு ஏற்ற நல்ல கால நிலை அங்கே இருப்பதால் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய இதரப் பகுதிகளையும் கையகப்படுத்தி, அந்தப் பழத் தோட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்போது அமைந்திருக்கிற பழப்பண்ணை 25 ஏக்கரில் இருக்கிறது. தொடர்ந்து ஓரளவுக்கு இலாபகரமாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பண்ணை வனத்துறையிலிருந்து குத்தகைக்கு நிலத்தை எடுத்து, அந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற நிலங்களைக் கையகப்படுத்தி பண்ணையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு இல்லை. காரணம் நிலத்தைப் பெற வழியில்லை. ஆனால் நாம் அங்கே பணிபுரிகிறவர்களுக்கு குடியிருப்பு போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தால், இன்னும் நல்லமுறையில் அந்தப் பண்ணை நடைபெறும் என்று கருதுவதால் அதற்காக 5,80,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டும், அந்தப் பண்ணையை விரிவுபடுத்தலாம் என்று கருதுகிறேன். விற்பனையைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற துறை அலுவலர்களால் தான் விற்பனை செய்யும் பணி நடைபெறுகிறது.

கலவை பேரூராட்சிக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

324—(*வினா 17991)—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலவைப் பேரூராட்சிக்குப் பாலாற்றிலிருந்து குடிதண்ணீர் கொடுக்க குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெறும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) எப்பொழுது குடிநீர் வழங்க இயலும் ?